
✆ 0431 - 2461415

# திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்

2, லாசன்ஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி–620 001



15.10.1931 27.07.2015

# KALAM VISION PARK

விலை ரூ. 10/–



# KALAM VISION PARK

நோக்கம் ஓராண்டாயிருந்தால்,

பூக்களை வளர்ப்போம்.

நோக்கம் பத்தாண்டாயிருந்தால்,

மரங்களை வளர்ப்போம்.

நோக்கம் முடிவில்லாமலிருந்தால்,

மனிதகுலத்தை வளர்ப்போம்.


# KALAM VISION PARK

மாமனிதர் அப்துல் கலாம் அவர்களைப் பற்றிய அரிய தகவல்கள், இளைய சமுதாயத்திற்கு அவர் வழங்கிய அறிவுரைகள் சில என்றும் நிலைத்திருக்கும்படி கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டு நம்முடைய ஐயப்ப சங்க வளாகத்தில் எல்லோரும் படித்து பயன்பெறக்கூடிய வகையில் நிறுவப் பட்டுள்ளன. இந்த Kalam Vision Park ஆனது அவரின் பிறந்த நாளான அக்டோபர் 15ல் (2015) மாணவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மற்றவர்களுக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த வாசகங்கள் தொகுக்கப்பட்டு ஒரு புத்தக வடிவில் கொடுக்கப்படுகின்றது. படித்துப் பயன் பெறுவோமாக!

15.10.2015

**ஐயப்ப சங்கத்தினர்**





## 1. A PRESIDENT LIKE NO OTHER

Scientist. Missile Man. Visionary. People's President. Statesman. A.P.J. Abdul Kalam was all this and much more. He was revered for his achievements in the fields of defence and space. But it was his stint as President of India that endeared him to our hearts. The great man will be missed, but his VISION will live on.

• • •

**2.**



- ❖ A Dream is not that which you see while sleeping, it is something that does not let you sleep.
- ❖ All of us do not have equal talent. But, all of us have an equal opportunity to develop our talents.
- ❖ For great men, Religion is a way of making friends; Small people make religion a fighting tool.

Religion Unites
Not Divides

● ● ●

## 3. மரபை மதிக்க வேண்டும்

பழைய விஷயங்கள் என்பதற்காக எல்லாவற்றையும் மாற்ற வேண்டும் என அவசியமில்லை. கலாம் ஜனாதிபதியாக இருந்தபோது அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் இந்தியா வர இருந்தார். அதற்காக இந்தியா வந்த அமெரிக்க அதிகாரிகள், இந்திய ஜனாதிபதி மாளிகையைச் சுற்றிப் பார்த்தனர். அங்கிருந்த தரை விரிப்புகள் ஆடம்பரமாக இல்லை என மாற்றச் சொன்னார்கள். அமெரிக்க அதிபரின் பாதுகாப்புக்காக இரண்டாயிரம் ஊழியர்களை இந்தியாவுக்கு அழைத்து வருவது பற்றியும் பேசினார்கள்.

இரண்டையும் மறுத்த கலாம், அதற்காக சொன்ன காரணங்கள் :

“இந்த நாட்டின் பல மூத்த தலைவர்களின் காலடிகள் பட்ட அந்தக் கார்பெட்டுகளை மாற்றுவதில் எனக்குச் சம்மதமில்லை.

இங்கு வரும் விருந்தினர்களை எங்கள் உயிரைக் கொடுத்தாவது நாங்கள் காப்பாற்றுவோம்.
வேறு பாதுகாப்பு ஊழியர்கள் அவசியமில்லை.”

● ● ●

## 4. மற்றவரையும் மதிக்க வேண்டும்

கலாம் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஒருநாள் இரவு டெல்லியில் கடுமையான மழை. ஜனாதிபதி படுத்திருந்த அறையில் மழைநீர் சற்றே ஒழுகியது. சரியாக அவர்மீதே மழைத்துளிகள் பட அவரது தூக்கம் கெட்டது. “இப்படியா இந்த மாளிகையைப் பராமரிப்பீர்கள்” என அந்த இரவிலேயே அவர் கத்திக் கூச்சல் போட்டு எல்லோரையும் ஆட்டிப் படைக்கவில்லை. பணி முடித்துத் தூங்குபவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று நினைத்தவர், மறுநாள் காலை அலுவலக நேரம் துவங்கிய பிறகே தனது செயலாளர் பி.எம். நாயருக்கு போன் செய்து விஷயத்தைச் சொன்னார்.

இந்தக் கனிவில் அத்தனை ஊழியர்களும் நெகிழ்ந்துவிட்டனர்.

• • •

## 5. கலாம் பற்றிய அரிய தகவல்கள்

❖ 2005ம் ஆண்டு, கலாம் சுவிட்சர்லாந்து நாட்டுக்குச் சென்றார். அவர் தங்களது நாட்டுக்கு வந்த மே 26ம் தேதியை **'அறிவியல் தினமாக'** சுவிட்சர்லாந்து அறிவித்தது.

❖ வெறும் இரண்டு பெட்டி நிறைய உடைமைகளோடு குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியேறிய கலாம், பதவி விலகும் போதும் அதே போல இரண்டு பெட்டிகளுடனே வெளியேறினார். அவரது பெரும்பாலான உடமைகள், அவர் வாங்கிக் குவித்திருந்த புத்தகங்கள்தான்.

❖ தான் எழுதிய அக்னிச் சிறகுகள் நூலில் 'என் கதை என்னோடு முடிந்துவிடும். உலக வழக்கப்படி எனக்கு எந்தப் பரம்பரைச் சொத்தும் இல்லை. நான் எதையும் சம்பாதிக்கவில்லை. எதையும் கட்டி வைக்கவில்லை. என்னை மற்றவர்கள் உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என நான் எதிர்பார்க்கவில்லை. என் கதையால் சில ஆத்மாக்களாவது உத்வேகம் பெறக்கூடும் என நம்புகிறேன்' என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

● ● ●

## 6. கலாம் பற்றிய அரிய தகவல்கள்

- இந்திய ராணுவத்தின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் இயக்குனராக அவர் இருந்தபோது, தனது அலுவலகத்தின் காம்பவுண்ட் சுவரில் கண்ணாடித்துண்டுகள் பதித்து பாதுகாப்பை பலப்படுத்தும் முயற்சியைத் தடுத்துவிட்டார். காரணம் : “சுவரில் இப்படி கண்ணாடி பதித்தால், பாவம்....பறவைகள் எங்கே போய் உட்காரும்?”

- ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் நிகழ்காலத்தையே மறந்திருக்கும் போது அவர் இந்தியாவின் எதிர்காலமாக இருந்திருக்கின்றார். எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தார். எதிர்காலத் தலைமுறைக்கு உற்சாகமூட்டினார். கலாம் காலமாய் நிற்கிறார்.

- ஒரு தேசம் ஊழல் இல்லாமலும், அறிவாளிகளின் தேசமாகவும் இருக்குமளவுக்கு மூன்று பேரால் மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்த முடியும். தாய், தந்தை, ஆசிரியர் தான் அந்த மூன்று பேர்.

● ● ●

# 7. கலாமின் அந்த புத்தகம்

சென்னை எம்.ஐ.டி. பொறியியல் கல்லூரியில் ஏரோனாடிக்கல் பொறியியல் துறையில் இடம் கிடைத்து, பணம் கட்ட முடியாமல் கலாம் தவித்தபோது அவரின் சகோதரிதான் நகைகளைக் கொடுத்து படிக்க அனுப்பினார். ஆனால் இடையில் கலாமின் அப்பாவுக்குத் தொழிலில் பாதிப்பு ஏற்பட்டது. படிப்பை விட்டுவிட்டு ஊருக்குத் திரும்பச் சொன்னார் அப்பா. ஊருக்குப் போக பணம் இல்லாததால், மூர் மார்கெட்டில் ஒரு பழைய பேப்பர் வியாபாரியிடம் தனது புத்தகத்தை விற்கச் சென்றார். அந்த வியாபாரி இவர் மீது இரக்கம் கொண்டு 60 ரூபாய் கொடுத்து அனுப்பினார். “நான் இந்தப் புத்தகத்தை யாருக்கும் விற்க மாட்டேன். திரும்பி வந்து பணத்தைக் கொடுத்து புத்தகத்தை வாங்கிக் கொள். குடும்பக் கஷ்டத்துக்காக படிப்பை விடாதே. மேலே படி ”என்று சொன்னார்.

‘தியரி ஆஃப் எலாஸ்டிசிடி’ என்ற அந்தப் புத்தகம்தான் அவரைப் பெரிய உயரத்திற்குக் கொண்டு சென்றது. தனக்கு பணத்தைக் கொடுத்து மேலே படிக்கச் சொன்ன பேப்பர்காரரை எப்போதும் நன்றியோடு குறிப்பிடுவார் கலாம்.

● ● ●



## ௮. வேர்களை மறக்க வேண்டாம்

ஜனாதிபதி ஆவதற்கு முன்பாக அண்ணா பல்கலைக்கழகத்தில் கௌரவப் பேராசிரியராக இருந்தார் கலாம். ஜனாதிபதி பதவிக் காலம் முடிந்ததும் மீண்டும் அண்ணா பல்கலைக் கழகத்துக்கே வந்தார். முன்னாள் ஜனாதிபதி என்பதற்காக தனி மாளிகையையும், கூடுதல் பணியாளர்களையும் ஒதுக்க அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர் முயன்றபோது, கலாம் மறுத்து விட்டார். "ஏற்கனவே நான் இருந்த அறையே போதும்" என கண்டிப்பாகச் சொன்னார்.

ஜனாதிபதி என்ற பதவி அவருக்குள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தி விடவில்லை.

• • •

## 9. ஆதாயம் தேடக் கூடாது

தனது பதவிக்காக மரபுரீதியாக வழங்கப்படும் சலுகைகளைக்கூட கலாம் கேட்டுப் பெற்றதில்லை.

அவரின் நெருங்கிய உறவினர்கள், ஒரு முறை டெல்லியையும், ஜனாதிபதி மாளிகையையும் பார்க்க ஆசைப்பட்டார்கள். அவர்களை விமானத்தில் அழைத்தால் செலவாகும் என்பதால் ரயிலில் வரச் சொன்னார் கலாம்.

90 வயது நிரம்பிய கலாமின் அண்ணனில் தொடங்கி ஒன்றரை வயதான அண்ணனின் கொள்ளுப்பேரன் வரை 52 பேர் வந்து ஜனாதிபதி மாளிகையில் தங்கினர்.

அவர்கள் தங்கிய செலவு, ஊர் சுற்றிப் பார்த்த செலவிலிருந்து எல்லாவற்றுக்கும் கணக்கு வாங்கி, தன் சொந்தப் பணத்திலிருந்து மூன்றரை லட்சம் ரூபாயைக் கட்டினார் கலாம்.

● ● ●

## 10. அம்மாவைப் பற்றி அப்துல் கலாம்

1941-ம் வருடம் இரண்டாம் உலகப் போர் கொழும்புவை எட்டிவிட்டதால் ராமேஸ்வரத்திலும் போர் மேகங்கள். ராமேஸ்வரத்தில் எங்களின் பெரிய கூட்டுக் குடும்பம் வசித்த அந்த சிறிய வீட்டின் கதவையும் போரின் தாக்கம் தட்டியது. இதனால் உணவில் ஆரம்பித்து எல்லாவற்றுக்கும் தட்டுப்பாடு.

மிக எளிமையான காலை உணவுதான் எங்கள் வீட்டில் எப்போதும். அதிலும் கூட எனக்குக் கொஞ்சம் அதிகம் தருவார் என் தாயார். நான் படித்துக் கொண்டே (பேப்பர் போடும்) வேலையும் பார்க்கிறேன் இல்லையா....ஓட சக்தி வேண்டுமே அதற்காக..... அனைவரும் உண்டு கொண்டு இருந்தோம். நான், என் தாயார் சப்பாத்தி தரத் தர சாப்பிட்டுக் கொண்டே இருந்தேன். சாப்பிட்டு முடித்தபின் என் அண்ணன் என்னை வீட்டுக்கு வெளியே அழைத்துச் சென்றார். கலாம், நீ என்ன காரியம் செய்கிறாய்....அம்மா, நீ சாப்பிட சாப்பிட சப்பாத்தி தந்து கொண்டே இருக்கிறார். அவர் தனக்காக போட்ட சப்பாத்தியையும் உனக்கே தந்து விட்டார். நீயும் எல்லாவற்றையும் தின்றுவிட்டாய். இனி வீட்டில் மாவும் இல்லை,

சப்பாத்தியும் இல்லை... கொஞ்சம் பொறுப்பாக நடந்துகொள், இது கஷ்டமான காலம். அம்மாவை பசியில் வாட விடாதே என்றார்.

இந்த விவரத்தைக் கொஞ்சமும் உணராமல் சாப்பிட்ட எனக்கு கை கால்கள் நடுங்கிவிட்டன. என்ன காரியம் செய்து விட்டோம் என கலங்கிப் போனேன். ஓடிப்போய் என் அம்மாவைக் கட்டிக் கொண்டேன். அவரிடம் தான் முதன் முதலாக தியாகத்தைக் கற்றேன்.

நான் சாதிப்பேன் என என் அம்மா நம்பியிருக்க வேண்டும். இதனால் அந்தக் கஷ்டத்திலும் எனக்கு தனியாக ஒரு மண்ணெண்ணெய் விளக்கைத் தந்து 11 மணி வரை படிக்க உதவினார். அது மட்டுமல்ல, அவரும் என்னோடு விழித்திருப்பார்....பின்னர் என்னை தூங்க வைத்துவிட்டே அவர் உறங்குவார்... என் அம்மா அன்பும் கருணையும் நிறைந்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு புனிதத்தன்மை கொண்டவர். 5 வேளை தொழுகை செய்யும் போது ஒரு புனித தேவதை மாதிரி எனக்குத் தெரிவார்.

தாயே!

"உங்கள் அன்பும், உங்கள் பாதுகாப்பும், உங்கள் நம்பிக்கையும் எனக்கு பலம் தந்தன. இந்த உலகத்தை அச்சமின்றி எதிர்கொள்ள வைத்தன."

• • •



## 11. KALAM'S MESSAGE TO YOUNG

**Courage**

Courage to think different,
Courage to invent,
Courage to travel on an unexplored path
Courage to discover the impossible,
Courage to combat the problems and succeed,
are the unique qualities of youth.

As a youth of my nation,
I will work and work with courage to achieve
success in all the missions.

• • •

## 12. உங்களுக்கான இலக்கு அவசியம்

எனக்கு ஏறக்குறைய பத்து வயதாக இருக்கும் போது நான் இராமேஸ்வரத்தில் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அப்போது என்னுடைய ஆசிரியர் திரு. சிவசுப்ரமணிய அய்யர் அவர்கள் எனது வாழ்வின் இலட்சியத்தை என்னுள் தூண்டிவிட்டார். அப்பொழுது நான் என் வாழ்விலே ஆகாய விமானம் தொடர்பான பணிகளில் ஈடுபடவேண்டும் என்று முயற்சித்தேன். இறுதியாக ராக்கெட் இன்ஜினியராக ஆனேன்.

அதுபோல நீங்களும் உங்களது வாழ்வின் இலக்கை அடையாளம் கண்டுகொண்டு அதற்கென உற்சாகத்தோடு துவளாது, துடிப்போடு இடைவிடாது உழையுங்கள். உங்கள் இலக்கு என்னவாக இருந்தாலும்.

அதாவது நீங்கள் ஆசிரியராக விரும்பினாலும் சரி, டாக்டராகவோ, சமூக சேவகராகவோ, மக்கள் தலைவராகவோ ஆக விரும்பினாலும் சரி, உங்களது அந்தக் குறிக்கோளுடன் நீங்கள் ஒரு நல்ல மனிதராவதையும் இலக்காகப் பின்னிக் கொள்ளுங்கள். நீங்களும் நாடும் ஒருசேரப் பயனடைவீர்கள்.

• • •

# 13. ME AND MY NATION - INDIA

As a young citizen of India,
armed with technology, knowledge and
love for my nation,
I realize, small aim is a crime.

I will work and sweat for a great vision,
the vision of transforming India into a
developed nation,
powered by economic strength with value
system.

I am one of the citizens of a billion,
only the vision will ignite the billion souls.
It has entered into me,
the ignited soul compared to any resource,
is the most powerful resource
on the earth, above the earth and under the
earth.

I will keep the lamp of knowledge burning
to achieve the vision - Developed India.

• • •



# 14. KALAM AS A TEACHER

I knew I was putting you under immense pressure when I rejected your work the other day. I set an impossible deadline - yet you have met it with work that I can only call "outstanding".

As your teacher, I had to push you to your limits so that you could recognize your own true potential.

• • •

**15.**



If you fail, never give up because

F.A.I.L. means

**"First Attempt in Learning "**

End is not the end, in fact

E.N.D. means

**"Effort Never Dies "**

If you get No as an answer, remember

N.O. means

**"Next Opportunity"**

So Let's be positive.

• • •

## 16. நாகலாந்து சிறுவன் கேட்டது

திருவாளர் குடியரசுத் தலைவர் அவர்களே! நானொரு வளமான, அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும் பாதுகாப்பான இந்தியாவில் வாழ விரும்புகிறேன். அதற்கு நீங்கள் என்ன செய்ய இருக்கிறீர்கள்? நானென்ன செய்ய வேண்டும்?

அந்தச் சிறுவன், “நான் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்ட கேள்வியில் இளைய சமுதாயத்தின் பொறுப்புணர்ச்சி மிளிர்வதைக் கண்டேன். இளைய சமுதாயம் முன்னேறத் துடிக்கிறது.

நான் சொன்னேன்: இந்தத் தருணத்தில் நீ செய்ய வேண்டியது நன்றாகப் படிப்பதுதான். ஓய்வு நேரத்தில் எழுதப் படிக்கத் தெரியாத இரண்டு பேருக்கு அதைச் சொல்லிக் கொடு.

இவ்வாறு எல்லோரும் செய்தால் கோடிக்கணக்கான மக்கள் கல்வியறிவு பெற வாய்ப்புள்ளது. அதைத் தவிர, நீ பன்னிரண்டாம் வகுப்பு தாண்டுவதற்குள் ஐந்து மரக் கன்றுகளை நட்டு வளர்.

இந்தியாவில் ஏறக்குறைய 30 கோடி மக்கள் பதினேழு வயதுக்குட்பட்டவர்கள். நீங்கள் இவ்வாறு மரம் நட்டால் ஏறக்குறைய 100 கோடி மரங்கள் வளர வாய்ப்புள்ளது. நீ செய்ய வேண்டியது இதுதான்.

• • •

## 17. இதர வழியில் வரும் செல்வத்தை ஏற்காதே!

கலாம் பள்ளியில் படித்த காலத்தில் அவரது வீட்டுக்கு ஒருவர் வந்தார். அப்போது கலாமின் தந்தை வீட்டில் இல்லை. வீட்டுக்குள் கலாமின் அம்மா தொழுகையிலிருந்து பாதியில் எழ வழியில்லாத அளவுக்கு இறைவனை வேண்டிக் கொண்டிருந்தார். வந்தவரின் கையில் ஒரு தாம்பூலத்தட்டு இருந்தது. "இதை வாங்கிக் கொள்" என்றார் அவர்.

கலாம் ஒரு நிமிடம் யோசித்தார். அம்மாவிடம் கேட்கலாம் என்றால் அவர் தொழுகையில் இருக்கிறார். வாங்காமல் போனால் வந்தவரை அவமானப் படுத்தியதாக ஆகிவிடும். வேறுவழியின்றி கலாம் அதை வாங்கினார். அதில் விலையுயர்ந்த வேட்டி, அங்கவஸ்திரம், பழங்கள், இனிப்புப் பாக்கெட் எல்லாம் இருந்தன. பஞ்சாயத்துத் தேர்தலில் கலாமின் தந்தை வெற்றி பெற்று பதவிக்கு வந்தால், அவருக்கு லஞ்சம் கொடுக்கவே அந்த மனிதர், கலாம் வீட்டுக்கு வந்திருந்தார். இது தெரியாமல் கலாம் அதை வாங்கி வைத்துக்கொண்டார்.

பிறகு அப்பா வீட்டுக்கு வந்ததும் கலாம் நடந்ததைச் சொன்னார். அவ்வளவுதான், கலாமின் தந்தைக்குத் தறிகெட்டுக் கோபம் வந்தது. தாறுமாறாக கலாமைத் திட்டினார். முதுகில் ஒரு அடியும் விழுந்தது. கலாம் அழ ஆரம்பித்தார்.

கோபம் தணிந்த பின்பு கலாமை அருகில் அழைத்தார் தந்தை. “இதுபோன்ற பரிசுப்பொருள்களைத் தருபவர்கள் ஒரு குறுகிய நோக்கத்தோடு தான் செயல்படுவார்கள். நம்மைப் போன்றவர்கள் இப்படிப்பட்ட நோக்கங்களுக்கு அடிமையாகிவிடக் கூடாது. வெகுமதிகள் என்பது பிரதிபலன் எதிர்பார்த்தே நமக்குக் கொடுக்கப்படுகின்றன” என்று அறிவுரை செய்தார்.

புனித குரானிலிருந்து ஒரு வாசகத்தையும் சொன்னார்:

“கடவுள் உனக்கு ஒரு பொறுப்பையும், பதவியையும் தரும்போது, அதைச் செவ்வனே நடத்திப் போவதற்குரிய பொருளையும் எப்படியாவது தருவார். இதர வழிகளில் வரும் செல்வத்தை ஏற்காதே!”

தனக்குத் தரும் பரிசுகளைப் புன்னகையுடன் கலாம் மறுத்ததற்குக் காரணம் இதுதான்.

• • •

## 18. மாணவர்களுக்கான பத்து உறுதிமொழிகள்

- ❖ நான் மேற்கொண்டு வரும் கல்விப்பணியை கவனமாகவும், சிரத்தையுடனும் செய்து அதில் நிபுணத்துவம் பெறுவேன்.
- ❖ இப்பொழுதிலிருந்து நான் எழுதப் படிக்கத் தெரியாத, குறைந்தபட்சம் பத்துப் பேருக்காவது அதைச் சொல்லிக் கொடுப்பேன்.
- ❖ நான் குறைந்தது பத்து மரக்கன்றுகளையாவது நட்டுப் பராமரித்து வளர்த்து அவற்றை மரங்களாக்குவேன்.
- ❖ நான் வாழும் இடத்துக்கு அருகிலுள்ள கிராம அல்லது நகர்ப்புறங்களில், போதை அல்லது சூதாட்டப் பழக்கத்திற்காளாகி துயருறும், குறைந்தபட்சம் ஐந்து பேரையாவது அதிலிருந்து நிரந்தரமாக மீட்க முயற்சிப்பேன்.
- ❖ என் சகோதர மனிதரின் துயரையும் வலியையும் துடைக்க என்னாலானவற்றைச் செய்வதற்குத் தொடர்ந்து முயற்சிப்பேன்.

- ❖ மதம், இனம், மொழி, ஜாதி ஆகியவற்றின் அடிப்படையில் மக்களைப் பிரித்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கும் எந்தவொரு அமைப்பையும் நான் ஆதரிக்க மாட்டேன்.
- ❖ நான் நேர்மையாக நடந்துகொள்வதோடு லஞ்சம் இல்லாத சமுதாயம் உருவாக என்னால் இயன்ற முயற்சிகள் எல்லாம் செய்வேன்.
- ❖ ஒரு ஞானமும் விவேகமும் நிறைந்த அறிவார்ந்த பண்பட்ட குடிமகனாக நான் முயற்சி செய்வதோடு என் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் நேர்மையான வழியிலே நடந்துகொள்ள அவர்களை ஊக்குவிப்பேன்.
- ❖ உடல் ஊனம் மற்றும் மனவளர்ச்சி குன்றியவர்களின் உண்மையானத் தோழனாக நடந்துகொள்வதோடு இயன்றவரை நம்மைப் போலவே அவர்களும் இயல்பான வாழ்க்கையை மேற்கொள்ள நான் உண்மையாக உழைத்து முழுமையாக முயற்சிப்பேன்.
- ❖ நான், என் நாடு மற்றும் சக குடிமக்களின் வெற்றிகளை மகிழ்ந்து கொண்டாடுவேன்.

● ● ●

## 19. ஆசிரியர்களுக்கு அறிவுரை

❖ சராசரி திறமை கொண்ட மாணவரை மிகச்சிறந்த மாணவராக முன்னேற்றினால்தான் என்னை ஒரு சிறந்த ஆசிரியராக நான் கருதுவேன்.

❖ என் வாழ்க்கையே என் மாணவர்களுக்கு அறிவுரையாக இருக்கும் வகையில், என் தனிப்பட்ட வாழ்க்கையில் ஒழுக்க விதிமுறைகளை முழுமையாகப் பின்பற்றுவேன்.

❖ சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்கும் ஆர்வத்தைக் குழந்தைகள் மற்றும் மாணவர்களிடம் வளர்ப்பேன். இதன் மூலம் அவர்களைச் சுயசிந்தனை கொண்ட, அறிவுபலம் நிறைந்த நல்ல குடிமக்களாக உருவாக்குவேன்.

❖ எல்லா மாணவர்களையும் சமமாக நடத்துவேன். மதம், இனம், மொழி அடிப்படையிலான எந்தப் பாகுபாட்டையும் ஆதரிக்க மாட்டேன். என் மாணவர்களின் வெற்றியை எப்போதும் உற்சாகத்துடன் பாராட்டிக் கொண்டாடுவேன்.

• • •



## 20. COULD ANYTHING COMPENSATE?

" A large number of Scientists and Engineers leave this country at their first opportunity to earn more money abroad.

It is true that they definitely get greater monetary benefits, but could anything compensate for this love and respect from one's own countrymen?"

• • •

## 21. தேசத்துக்காக வேண்டச் சொன்ன கலாம் !

ஜனாதிபதியாக இருந்தபோது ஒருமுறை திருப்பதி வெங்கடாஜலபதி ஆலயத்துக்கு வருகை புரிந்தார் அப்துல் கலாம். ஆனால் தன் வருகையால் செய்யப்படும் பாதுகாப்பு கெடுபிடிகள் எதுவும் பக்தர்களை பாதித்துவிடக் கூடாது என கவலைப்பட்டார் அவர். அதனால் விடியற்காலையில் நடத்தப்படும் வைகறை பூஜைகளில் மட்டும் கலந்து கொண்டார்.

அந்தக் காலத்திலிருந்து திருப்பதி கோயிலில் ஒரு சம்பிரதாயம் உண்டு. இந்துக்கள் அல்லாத மாற்று மதத்தினர் ஆலயத்திற்குள் வரும் போது, ஒரு குறிப்பேட்டில் கையெழுத்திட்டுவிட்டு உள்ளே வர வேண்டும். நாட்டின் முதல் குடிமகன் என்பதால் இவரிடம் எப்படி அந்தக் கையெழுத்தைப் பெறுவது என கோயில் அதிகாரிகள் தயங்கியபடியே அவரை உள்ளே அழைத்தார்கள். ஆனால் கலாமுக்கு இந்த சம்பிரதாயம் இருப்பது தெரியும். அவராகவே அதிகாரிகளிடம் அந்தக் குறிப்பேட்டை எடுத்து வரச் சொல்லி, அதில் கையெழுத்து போட்டுவிட்டு உள்ளே வந்தார். தனக்காக எந்தவிதச் சலுகைகளையும் யாரும் செய்வதை விரும்பவில்லை அவர்.

அந்தக் காலத்தில் நாட்டின் மன்னருக்கு அளிக்கப்படும் 'இஸ்டிகபால்' மரியாதைகள் தரப்பட்டு, ராஜகோபுரத்தின் அருகே வரவேற்கப்பட்டார் அவர். லட்டு, வடை பிரசாதமும், வஸ்திரம் என்கிற பட்டுத்துணியையும் அர்ச்சகர்கள் வாழ்த்தி அவரிடம் கொடுத்தார்கள்.

சகஸ்ரநாம அர்ச்சனை செய்ய 200 ரூபாய் கட்டணம் செலுத்தி டிக்கெட் வாங்கவேண்டும். அருகில் இருந்த சேஷாத்ரி என்ற பட்டரிடம் தன் பாக்கெட்டில் இருந்து ரூ. 600 பணம் எடுத்துக் கொடுத்து அருகில் இருந்த ஆளுநர் பர்னாலா, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோருக்கும் சேர்த்து மூன்று சகஸ்ரநாம அர்ச்சனைச் சீட்டுகளை வாங்கச் சொன்னார் கலாம்.

அர்ச்சனையை ஆரம்பித்தார்கள். அப்போது அப்துல் கலாம் குறுக்கிட்டு, இந்த ஸ்லோகங்களைக் கூறி வாழ்த்தும் போது, நம் தேசத்தின் பெயரைச் சொல்லி, 'இந்தியா' என்று வாழ்த்திக் கொடுங்களேன்! நாட்டுக்காக ஆசீர்வாத மந்திரம் சொல்லுங்களேன். இந்தியர்கள் அத்தனை பேரின் நலனுக்காக இந்தப் பிரார்த்தனை இருக்கட்டும் என்று கேட்டுக் கொண்டார்.

எல்லோரும் திகைத்து விட்டனர். திருப்பதிக்கு எத்தனையோ தலைவர்கள் வந்திருக்கிறார்கள். ஆனால் இதுவரை யாரும் இப்படிக் கேட்டுப் பெற்றதில்லை. அநேகமாக 'இந்தியா' என்ற பெயருக்குத் திருமலைக் கோயிலில் அர்ச்சனை நடந்தது இதுவே முதல்முறையாக இருக்கும்!

தேசத்தில் எங்கெங்கோ வறுமையில் வசிக்கும் முகம் தெரியாத, பெயர் தெரியாத ஏழை இந்தியர்கள் பலருக்கும் தங்கள் பெயரைச் சொல்லி, தங்கள் நல்வாழ்வுக்கு திருவேங்கடமுடையான் சன்னதியில் அர்ச்சனை செய்து கொள்ள முடியாது அல்லவா! பொத்தாம் பொதுவாக, அவர்களை எல்லாம் நினைத்து சங்கல்பம் செய்து கொண்டு, அர்ச்சனை செய்யச் சொன்னார் கலாம்!

தங்கள் குடும்பம், பிள்ளைகள் பெயரில்தான் பலரும் அர்ச்சனை செய்து பார்த்துள்ளோம். இல்லை என்றால் 'சுவாமி பெயருக்கே அர்ச்சனை' என்பார்கள் சிலர்! இப்படி ஒட்டுமொத்த தேசத்துக்காக அக்கறை காட்டுபவர் என்பதால்தான் அவர் 'மக்களின் கலாம்'!

• • •



## 22. கலாமிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது

எதிர்காலத்தில் மக்கள் உங்களை எப்படி நினைவுகூர வேண்டும் என நினைக்கின்றீர்கள்?

ஜனாதிபதியாகவா?

விஞ்ஞானியாகவா?

எழுத்தாளராகவா ?

ஏவுகனை மனிதராகவா?

இந்தியா 2020 - முப்பது கோடி பேரின் குறிக்கோள் என்றெல்லாம் லட்சியக் கனவுகளை வழங்கியவராகவா?

பதில் சொன்னார் கலாம் :

**“ஓர் ஆசிரியராக நான் நினைவுகூரப்பட வேண்டும்”**

● ● ●

**23.**



" I will not be presumptuous enough to say that my life can be a role model for anybody; but some poor child living in an obscure place in an underprivileged social setting may find a little solace in the way my destiny has been shaped.

It could perhaps help such children liberate themselves from the bondage of their illusory backwardness and hopelessness.."

● ● ●

# 24. MY STORY

the story of the son of Jainulabdeen,

who lived for over a hundred years on Mosque Street in Rameswaram island and died there;

the story of a lad who sold newspapers to help his brother and study;

the story of a pupil reared by Sivasubramania Iyer and Iyadurai Solomon;

the story of student taught by teachers like Pandalai;

the story of an engineer spotted by MGK Menon and groomed by the legendary Prof. Sarabhai;

the story of a scientist tested by failures and setbacks;

the story of a leader supported by a large team of brilliant and dedicated professionals.

This story will end with me, for I have no belongings in the worldly sense. I have acquired nothing, built nothing, possessed nothing.

● ● ●

## 25. KALAM'S QUESTION TO YOU

I would like to ask, what would you like to be remembered for? You should write it down. It could be an important contribution, whether it is an invention, an innovation or a change that you bring about in society that the nation will remember you for.

### கலாம் நம்மிடம் கேட்கும் கேள்விகள்

நாம் எதற்காக நினைவுகூரப்பட வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

சமுதாயத்திற்கு நம்முடைய முக்கிய பங்களிப்பு என்ன?

நம்முடைய கண்டுபிடிப்பு எதைப்பற்றி?

சமூக முன்னேற்றத்திற்கு நாம் பரிந்துரைக்கும் புதிய திட்டம் என்ன?

நம் தேசம் நம்மைப் பற்றிப் பெருமைப் படக்கூடிய வகையில் என்ன செய்யப் போகிறோம்?

எழுதுங்கள்.

● ● ●

| *My answers to Kalam's questions* |
| --- |
| 1. நீ எதற்காக நினைவு கூரப்பட வேண்டும் என்று நினைக்கிறாய்?<br>What would you like to be remembered for ? |
| 2. சமுதாயத்திற்கு உன்னுடைய முக்கிய பங்களிப்பு என்று நினைப்பது என்ன ?<br>What would be your contribution to the society ? |

3. உன்னுடைய கண்டுபிடிப்பு எதைப்பற்றி இருக்கும்?

What would be your field of invention?

4. சமூக முன்னேற்றத்திற்கு நீ பரிந்துரைக்கும் புதிய திட்டம் என்ன?

What is your plan for the improvement of society?

5. நம் தேசம் உன்னைப்பற்றி பெருமைப்படக் கூடிய வகையில் நீ செய்ய நினைப்பது என்ன?

What you can do to make the nation proud?

குறிப்பு : இந்தப் பதில்களை ஒரு தனித் தாளில் எழுதி திருச்சி ஐயப்ப சங்கத்திற்கு அனுப்பலாமே!



**KALAM VISION PARK**

WHERE THE VISION IS ONE YEAR,
CULTIVATE FLOWERS.

WHERE THE VISION IS TEN YEARS,
CULTIVATE TREES.

WHERE THE VISION IS ETERNITY,
CULTIVATE PEOPLE.



"சர்வ வல்லமை வாய்ந்த கடவுளே, எனது மக்கள் வியர்வை சிந்தட்டும். அவர்களது உழைப்பு, தீமையை அழிக்கும் மேலும் பல அக்னிகளை உருவாக்கட்டும். எனது தேசம் அமைதியுடன் கூடி வளம் பெறட்டும். எனது மக்கள் இணைந்து வாழட்டும். ஒரு பெருமிதமிக்க இந்தியக் குடிமகன் என்ற புகழுடன் நான் இந்த மண்ணின் ஒரு துகளாக ஆகிவிடட்டும். மீண்டும் எழுந்து வந்து அந்தப் புகழில் இன்புறுவதற்காக..."

